C.C 249/17
PW 1
பெயர் ரவிக்குமார்
தேதி 20.03.2023
**(** எதிரி ஆஜர் இல்லை**.** எதிரி சார்பில் கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

உப்புக்கோட்டை கிராமத்தில் ஊருக்கு இரண்டு பக்கமும் பஸ்டாப் என்றால் சரிதான். இரண்டு பஸ்டாப்புகளிலும் தேனிக்கு செல்லும் பேருந்துகள் நிற்பதற்காகவும், தேனியிலிருந்த வரும் பேருந்துகள் நிற்பதற்காகவும் தனித்தனியே பேருந்து நிறுத்தம் அமைந்துள்ளதுள ன்றால் சரிதான். போலிச்விசாரணையிலும் புகாரிலும் எந்த பஸ்டாப்பில் சம்பவம் நடந்தது என்பதை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். பஸ்டாண்டு என்று தான் கூறியுள்ளேன். எனக்கு கபடி விளையாட தெரியும். நான் சரவணன், கார்த்திக், கருப்பையா ஆகியோர் ஒரே டீமை சேர்ந்தவர்கள் என்றால் சரவணன் வேறு டீமை சேர்ந்தவர். எனக்கு இருசக்கரவாகனம் ஓட்ட தெரியும். முதல் விசாரணையில் எதிரி அருவாளால் என்னை வெட்டியதாக கூறியுள்ளேன். மேற்படி விபத்தை புகார் மற்றும் போலிச்விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். கபடி விளையாடுவதில் நானும் எதிரியும் வெவ்வேறு அணிகளில் விளையாடியதால் எங்களுக்குள் பிரச்சனை இருந்து மனஸ்தாபம் இருந்தது என்றால் சரியல்ல. எங்களுக்கு பிரச்னை ஏற்பட்ட மனஸ்தாபம் இருந்தது என்றும் அதை மறைத்து வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் இருசக்கரவாகனத்திலிருந்து விழுந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இருசக்கரவாகனத்திலிருந்துவிழுந்ததால் எதிரி அந்த சமயத்தில் அருகில் இருந்ததால் கபடி விளையாடுவதில் இருந்த பிரச்சனையை மனதில் வைத்த பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் உடன் இருந்த எதிரி மற்றும் கருப்பையா, கார்த்திக் ஆகியோர் என்னை 108 ல் ஏற்றி மருத்தவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை எந்த வகையிலும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டவில்லை என்றால் சரியல்ல. கபடி விளையாடுவதில் முன்விரோத்தை மனதில் வைத்து அதற்கேற்ப பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.